# தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்
## கணினி முறைமையின் பாதுகாப்பு

| அலகு – 03 | மதிப்பீடு – 01 |
|---|---|

வினா வகை – **சரி, பிழை அடையாளம் இடல்**

தரம் - 07 நேரம் 15 நிமிடங்கள்

பெயர்/சுட்டெண்:-............................................

ICTTeacher.xyz

**01. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

1. சடுதியாக மின்சாரம் தடைப்படுவதைத் தவிர்த்து கணினிக்குத் தொடர்ந்து மின்சாரம் வழங்க UPS சாதனம் பயன்படுத்தப்படுகின்றது. ( )
2. கணினி ஆய்வு கூடத்தினுள் பாதணிகளுடன்(Shoes) பிரவேசிப்பது ஆய்வு கூடத்தைத் துப்புரவாக வைத்திருக்க உதவும். ( )
3. கணினி நச்சுநிரல்(Computer Virus) என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு தீங்கு விளைவிக்கும் மென்பொருள் ஆகும். ( )
4. தரவுகள் அல்லது மென்பொருள்கள் பழுதடையும் போது அவற்றைப் பெற "காப்பு நகல்கள்"(Backups) எடுக்கப்படுகின்றன. ( )
5. விரல் அடையாளம் அல்லது கண் வில்லை மூலம் ஒருவரை இனங்காண்பது "உயிர்மானக் கடவுச்சொல்"(Biometric password) எனப்படும். ( )
6. கணினி வன்பொருள்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய காரணிகளில "உயர் மின்னோட்டம்"(High current) ஒன்றாகும். ( )
7. கணினி ஆய்வு கூடத்தில் மிகையான ஈரலிப்பைத் தவிர்ப்பதன் மூலம் மின் சுற்றுத் தடையை(Short circuit) வளர்க்கலாம். ( )
8. ட்ரோஜன் குதிரைகள் என்பது பார்த்த மாத்திரத்தில் பயன்தரத்தக்க மென்பொருளாகத் தோன்றி பின்னர் தீங்கு விளைவிக்கும் பிறழ் பொருள் ஆகும். ( )
9. சந்தேகமான மின்னஞ்சல்கள் மற்றும் இணைப்புகளைத் (Attachments) திறந்து பார்ப்பது கணினிக்குப் பாதுகாப்பானது. ( )
10. கணினி முறைமையினுள் மிகை வெப்பம் ஏற்படுவதைத் தவிர்க்கக் குளிர்த்தும் விசிறிகளைப்(Cooling fan) பயன்படுத்தலாம். ( )

( புள்ளிகள் : 10 × 2 = 20 )